**MINUTES OF THE PUBLIC HEARING MEETING FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) – TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY OF THIRU. N. DHARMALINGAM OVER AN EXTENT OF 3.86.0 HECTARE LOCATED IN S.F.NOS. 27/1, 2, 3, 4, 28/1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 28/11A OF SITHALAPAKKAM VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, CONDUCTED ON 06.08.2025 AT 12.00 PM IN M/S. SRI LAKSHMI VIJAYACHANDRAN MARRIAGE HALL, MATHUR VILLAGE, VEMBAKKAM TALUK & TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. S. Siva | Revenue Divisional Officer(FAC),<br>Cheyyar,<br>Tiruvannamalai District. |
| 2. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 3. | Dr. S. Sugashini | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 4. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 5. | Thiru. M. Tamil Mani | Tahsildar,<br>Vembakkam,<br>Tiruvannamalai District. |
| 6. | Thiru. A. K. Arul Murugan | Assistant Geologist,<br>Geology and Mining,<br>Tiruvannamalai District. |
| 7. | Thiru. M. Sathish | Revenue Inspector,<br>Vembakkam,<br>Tiruvannamalai District. |
| 8. | Public and NGOs | 59 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the Tamil Nadu Pollution Control Board welcomed the Revenue Divisional Officer, Cheyyar who presided over the public Hearing meeting, other Government officials, the public & the NGOs and explained the need for the conduction of Public Hearing for obtaining Environmental Clearance for the proposed Rough stone and gravel quarry as follows:

"The public hearing meeting is being conducted for the proposed project of M/s. Thiru. N. Dharmalingam over an extent of 3.86.0 hectare in Sithalapakkam Village, Vembakkam Taluk, Tiruvannamalai District for obtaining prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA)as per the Environmental Impact Assessment Notification 2006."

"As per the EIA Notification 2006, the mining projects (Individual or Cluster) having extent above 5 hectares require the conduction of public hearing meeting for obtaining Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. This public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notices for this public hearing were published in dailies of "The Times of India" (English) & "Daily Thanthi" (Tamil) on 02.07.2025 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Rough stone and gravel quarry of M/s. Thiru. N. Dharmalingam to be conducted at M/s. Sri Lakshmi Vijayachandran Marriage Hall on 06.08.2025 @ 12.00PM."

The District Environmental Engineer further stated that "The project proponent will explain the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details through power point presentation. Following the presentation, the general public and NGOs can express their views, suggestions and comments on the said project one by one either in oral or in written format during when the public should register their name & village name. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority. Thereafter, the authority will consider the issue of Environmental Clearance to this proposed quarry. The Revenue Divisional Officer, Tiruvannamalai will inaugurate the public hearing meeting thereafter the project proponent will explain the Environmental Impact Assessment Study report."

The Revenue Divisional Officer, Cheyyar requested the project proponent to explain about the proposed rough stone and gravel quarry and the Environmental Impact Assessment study conducted by them to the public in detail and requested the general public to mention their name and their village name while expressing their views, suggestions and comments on the said project.

On behalf of the project proponent, Thiru. M. Sheik Nawas, Coordinator, M/s. Geo Exploration and Mining Solutions, Salem (Consultant for the proposed rough stone quarry of M/s. Thiru. N. Dharmalingam) explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them through power point presentation.

Subsequently, the Revenue Divisional Officer, Cheyyar requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one.

The following are the views/suggestions/comments represented by the public:

**1. Thiru. V. Perumal, Sithalapakkam Village:**

He stated that, "The arrival of this quarry provides a great opportunity for our villagers. It offers employment opportunities to many people. This proposed quarry benefits our village. Therefore, I express my **support for the establishment** of this quarry," and concluded his speech.

**2. Thiru. J. Murugan, Sithalapakkam Village:**

He stated that, "We welcome this proposed quarry, as it will bring abundant employment opportunities to our village and make our village as excellent one. We extend a warm welcome to this quarry," and concluded his speech by expressing his **support for the quarry's establishment**.

**3. Thiru. N. Anbarasan, Sithalapakkam Village:**

He stated that, "We own vehicles, and the arrival of this quarry will provide us with employment opportunities, improving our economic

situation. Therefore, we need this quarry," and concluded his speech by expressing his **support for the quarry's establishment**.

**4. Thiru. C. Anandhan, Sithalapakkam Village:**

He stated that, " I was unemployed after graduating. I know driving of vehicles. And I will get employment if this quarry comes and I will do my job efficiently and concluded his speech by expressing his **support for the quarry's establishment**.".

**5. Thiru. N. Gothandaraman, Sithalapakkam Village:**

He stated that, "The arrival of this quarry will provide employment opportunities to everyone, so I welcome it," and concluded his speech by expressing his **support for the quarry's establishment**.

**6. Thiru. Sunantha Reddy, NGO:**

He said, "My congratulations to the management and the environmental consultants for this project. I'm the first environmentalist in India to support industries. In my opinion, unemployment is the biggest pollution. Industries play a vital role in providing employment opportunities. I recommend to grant unconditional NOC to this quarry," and concluded his speech by expressing his support for the quarry's establishment.

**7. Thiru. E. Moorthy, Sithalapakkam Village:**

He extended greetings to the government officials representatives attending the public hearing for the proposed quarry in Sithalappakkam village. Having previously served as a ward member in nearby Elacherry for five years, the speaker is familiar with the benefits quarries can bring to local communities. The speaker highlights the positive impact quarries have had on Elacherry village, enabling various development projects through the revenue generated. They attribute the village's growth and development to the quarry's presence, stating that government funds alone would not have been sufficient. The speaker invites officials to visit Elacherry to witness the development firsthand and expresses confidence that the proposed quarry in Sithalappakkam would similarly benefit the local community. While

acknowledging potential issues with quarries, the speaker emphasizes the importance of proper management and regulation by authorities to mitigate these problems. The speaker concludes by expressing support for the quarry proposal, believing it would bring benefits to the local community, and thanks the officials for their attention.

**8. Thiru. Gopinath, Sithalapakkam Village.**

He stated, "Many families benefit from this proposed quarry. Earlier, I was working in SIPCOT, but due to health issues, I had to stay home. However, the quarry provided me with employment opportunities, and I'm doing well now. My children are also studying well. The quarry also supports local schools with funds, enabling children to study better. Additionally, it has improved the village's infrastructure, including lighting and roads. The quarry's presence is beneficial for our village, and I welcome it." and concluded his speech by expressing his support for the quarry's establishment.

**9. Thiru. Dhanasekar, Sithalapakkam Village.**

He stated, "In this regard, we would like to inform that we are having 5 hectare (apps) extent of agriculture lands situated adjacent to the proposed mining project. We are cultivating food grains such as paddy ragi, black gram and vegetables in our agriculture land for the past five generation.

This cultivation income is the only source of income for our family members and our sole livelihood. And also, this land is our backbone for our family expenses like day to day expenses, medical expenses education etc.,

Four years before, the government had approved same type of mining project without public consent and knowledge and approved the Rough stone and Gravel Quarry mining project. Because of this project we are unable to do the cultivation in our agriculture land. The water level in the well before this project was 10 feet from the ground level but now the well is totally dry.

Now referring to the new mining project, I strongly object to approving the project for the following reasons:

1) The primary concern is dust generation during quarry operations, which settles on crops, reducing their photosynthetic capacity and contaminating the soil by potential harmful particles.

2) Mining operations increased exposure to Air pollutants, such as silica dust and diesel exhaust, and risk long-term respiratory and skin related illnesses.

3) Blasting and excavation activities can disturb the soil structure in nearby fields, impacting water infiltration and drainage leading to reduced fertility and crop yields.

4) Blasting and drilling can cause vibrations leading to cracks and structural damage in nearby homes, wells and public infrastructure.

5) Quarry operations can potentially pollute groundwater sources used for irrigation, especially if improper waste management practices are employed.

6) When they use rock blasts powder to break the rock, the stone would fall in our cultivated land, after which we have to engage our own manpower to remove the fallen stones from the land.

7) We raised our objection and explained the agriculture loss for a number of times to the proposed quarry owner Mr. Dharmalingam personally and also raised our objection to the sub collector and VAO (Village administrative officer) during the month of February 2025 through phone during initial inspection of the proposed mining project.

8) In spite of our oral request and appeal he has not listen because he is very politically influenced person.

9) Since the proponent of this quarry has influence at all levels, we are under fear to raise any action against him.

10) Not only does the proposed project cause mental stress, but it also results in physical damage. We are particularly affected due to our land being located close to the project site.

11) Therefore, as a farmer I **object** the established mining project survey Nos. 27/1,2,3,4,28/1,2 3,4,5,6,7,8,9,10,28/11A adjacent to our lands.

With this, we hope that the district collector/public hearing officer will certainly hear our appeal and take appropriate action in safeguarding our agricultural lands and rescue our lives.

An acknowledgement may be issued for having admitted our objection appeal. Thank You." He concluded his speech by expressing his objection to the quarry's establishment.

**10. Thiru.Muthuraja, Ramanathapuram District, Kamuthi Village, NGO.**

He extends greetings to the district administration, Environmental Engineers, company owners, villagers, government officials, and social activists. Quoting Mahakavi Bharathi, the speaker emphasizes the importance of agriculture and industry in a nation's development. He notes that industries can bring about positive change, particularly in developing countries like India. Therefore, we have to support this proposed quarry. He offers suggestions to the proprietor of the quarry, including forming a committee with local elders to ensure smooth operations and minimize conflicts. He also recommends prioritizing local residents for employment opportunities. Additionally, he requested the company to plant long-lasting trees like pungai, vengai, and neem around the quarry to protect the environment. The speaker concludes by expressing support for the quarry's establishment.

**11.Thiru. G. Nagarajan, Chinna Elacheri Village.**

He stated, "The proposal of this quarry will create many job opportunities. So, I welcome the establishment of this quarry," and concluded his speech by expressing his **support for the quarry's establishment**.

**12.Thiru. Velu, Chinna Elacheri Village.**

He stated, "I wholeheartedly welcome this proposed quarry, which will pave the way for the village's development and progress. It will also provide increased job opportunities for the local people," and concluded his speech by expressing his **support for the quarry's establishment**.

**13.Thiru. Manokaran, Chinna Elacheri Village.**

He stated, "Our village is nearer to Sithalapakkam village. We are benefited greatly from the quarries. We've benefited road facilities, electricity, and other benefits. For 20 years, we struggled with water scarcity, but now, thanks to the quarry, we have an abundance of drinking water. The quarry's revenue has enabled us to access electricity, clean drinking water, and good roads. Additionally, the local schools have improved significantly due to the quarry's presence. In my opinion, the quarry has brought only benefits to our village, with no drawbacks." and concluded his speech by expressing his **support for the quarry's establishment**.

**14.Thiru. Yuvaraj, Sithalapakkam Village.**

He stated, "I extend my greetings to the government officials present at this public hearing. The proposed quarry is near our 10 acres agricultural land, which has been our livelihood for five generations. If the quarry is approved, it will severely impact our groundwater and agriculture, affecting the soil quality and crop growth. As farmers, we rely on agriculture, and the quarry's presence will be detrimental to our way of life. We are one of the families living closest to the proposed quarry site. While others may not have spoken up, I want to register my concerns. The quarry will have a significant impact on our land and the surrounding wells, which are crucial for our crops. I urge the authorities to consider the long-term consequences of approving the quarry. No one can guarantee that the groundwater will be protected or that the wells will not be affected. Our crops and livelihoods depend on these water sources. As someone who gathers that agriculture being the primary occupation for over 100 years, I strongly object to the

quarry and request that it not be approved." and concluded his speech by expressing his **objection to the quarry's establishment**.

**The following 35 nos. of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone & gravel quarry. In that 34 nos. have expressed their support to the establishment of this quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1. | Thiru. K. Sreenivasa Murthy, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 2. | Thiru. V. Mohan, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 3. | Tmt. Revali Savithri, Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 4. | Thiru. Kayapati Naresh, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 5. | Thiru. U. Ramachandra, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 6. | Thiru. Ankaiah, Andhra Pradesh.. | Expressed support in favour of the proposed quarry |
| 7. | Tmt. Gundala Saidama, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 8. | Thiru. Hajarathaiah, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 9. | Thiru. Subbaramaiah, Tirupati. | Expressed support in favour of the proposed quarry |
| 10. | Thiru. M. Sivanathan, Villupuram. | Expressed support in favour of the proposed quarry |
| 11. | Thiru. B. Balakrishna, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 12. | Tmt. Avutta Mangamma, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 13. | Thiru. Purushothaman, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 14. | Thiru. U. Sankaraiah, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 15. | Thiru. K. Saradha, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 16. | Thiru. J. Raja, Dharmapuri. | Expressed support in favour of the proposed quarry |
| 17. | Thiru. T. Devalingam, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 18. | Thiru. K. Saravana, Kanchipuram. | Expressed support in favour of the proposed quarry |
| 19. | Thiru. Duraisamy, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |

| | | |
|---|---|---|
| 20. | Thiru. Venkatesan, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 21. | Thiru. Muthu Raja, Ramnathapuram. | Expressed support in favour of the proposed quarry |
| 22. | Tmt. Aakkalaiahh Doti, Telangana. | Expressed support in favour of the proposed quarry |
| 23. | Thiru. Venkatesh boya, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 24. | Thiru. A. Subramanyam, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 25. | Tmt. S. Fathima, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 26. | Thiru. V. Manikandan, Villupuram. | Expressed support in favour of the proposed quarry |
| 27. | Thiru. V. Suresh, Villupuram. | Expressed support in favour of the proposed quarry |
| 28. | Thiru. A. Venkata Subbiah, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 29. | Thiru. S. Venkata Subbiah, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 30. | Thiru. Rajendiran, Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 31. | Thiru. Nokkiyamani, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 32. | Thiru. Tamizhmani, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 33. | Thiru. Inbasekaran, Ranipet. | Expressed support in favour of the proposed quarry |
| 34. | Thiru. D. Sampath, Vembakkam, Tiruvannamalai. | Expressed opposition to the proposed quarry |
| 35. | Palle Naveen Kumar, Telangana | Expressed support in favour of the proposed quarry |

As there were no views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the approval of Revenue Divisional Officer, Cheyyar, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 02.07.2025for notifying the public hearing meeting)
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (13 pages/59 persons).

4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).
7. Petitions received through Public Hearing Meeting – 35nos.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**Revenue Divisional Officer(FAC),**
**Cheyyar.**

(6/6)

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், சித்தாலப்பாக்கம் கிராமத்தில் புல எண்கள். 27/1, 2, 3, 4, 28/1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 28/11A –ல் 3.86.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. N. தர்மலிங்கம் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 06.08.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மண்டபம் மாங்கால் கூட்ரோட்டில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ லக்ஷ்மி விஜயச்சந்திரன் திருமண மண்டபத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. சீ. சிவா | வருவாய் கோட்ட அலுவலர்<br>(முழு கூடுதல் பொறுப்பு),<br>செய்யாறு,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 3. | முனைவர். சி. சுகாஷினி | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 4. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 5. | திரு.M. தமிழ்மணி | வட்டாட்சியர்,<br>வெம்பாக்கம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 6. | திரு.எ.கி. அருள்முருகன் | உதவி புவியியலாளர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 7. | திரு. எம். சதீஷ் | வருவாய் ஆய்வாளர்,<br>வெம்பாக்கம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 8. | பொதுமக்கள் மற்றும்<br>சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (59 நபர்களின் பட்டியல்<br>இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு

தலைமை வகித்த வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், சித்தாலப்பாக்கம் கிராமத்தில், 3.86.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். N. தர்மலிங்கம் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் சுரங்க நிறுவனமானது பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006–ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். N. தர்மலிங்கம் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். ஸ்ரீ லக்ஷ்மி விஜயச்சந்திரன் திருமண மண்டபத்தில் 06.08.2025 அன்று நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறுமென தினத்தந்தி மற்றும் தி டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி தாள்களில் 02.07.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை

தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்"

வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திரு. எம். ஷேக் நவாஸ், ஒருங்கிணைப்பாளர், தி/ள். ஜியோ எக்ஸ்பொளரேசன் & மைனிங் சொல்யூசன்ஸ், சேலம் (தி/ள். N. தர்மலிங்கம் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. திரு. V. பெருமாள், சித்தாலப்பாக்கம் கிராமம்.**

இவர் கூறுகையில், " இந்த குவாரி வருவதால் எங்கள் ஊர் மக்களுக்கு நல்ல வாய்ப்பாக அமைகிறது. எல்லோருக்கும் அதிகமாக வேலை வாய்ப்பு வழங்குகிறார்கள். இந்த குவாரி வருவது எங்கள் ஊருக்கு நன்மை அளிக்கிறது. எனவே இந்த குவாரி வருவதை நான் முன்மொழிகிறேன்" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**2. திரு. J. முருகன், சித்தாலப்பாக்கம் கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்த குவாரி வருவதால் எங்கள் ஊர் பக்கத்தில் வேலைவாய்ப்பு பெருகிடவும், எங்கள் ஊர் சிறந்து விளங்கிடவும், இந்த குவாரியை வருக வருக என வரவேற்கின்றோம்" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்

**3. திரு. N. அன்பரசன், சித்தாலப்பாக்கம் கிராமம்.**

இவர் கூறுகையில், "நாங்கள் வண்டிகள் வைத்துள்ளோம் இந்த குவாரி வந்தால் எங்களுக்கு அதில் வேலை கிடைக்கும் எங்கள் பொருளாதார மேம்படும் அதனால் இந்த குவாரி தேவைப்படுகிறது" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்

**4. திரு. C. ஆனந்தன், சித்தாலப்பாக்கம் கிராமம்.**

இவர் கூறுகையில், " நான் படித்து விட்டு வேலை இல்லாமல் இருந்தேன். எனக்கு ஓட்டுநர் தொழில் தெரியும். அதனால் இந்த கல்குவாரி வந்ததால் எனக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது. நல்லபடியாக வேலை செய்கிறேன்" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**5. திரு. N. கோதண்டராமன், சித்தாலப்பாக்கம் கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்த கல்குவாரி வருவதனால் அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும். அதனால் வரவேற்கிறேன்" என்று கூறி இந்த

குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**6. திரு. சுனந்தா ரெட்டி, சமூக ஆர்வலர்.**

இவர் கூறுகையில், "நிர்வாகத்திற்கும், இந்தத் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் ஆலோசருக்கும் எனது வாழ்த்துக்கள். இந்தியாவில், தொழில்களை ஆதரிக்கும் முதல் சுற்றுச்சூழல் ஆர்வலர் நான். என் கருத்துப்படி, வேலையின்மைதான் முக்கிய மாசுபாடு. வேலைவாய்ப்பை வழங்குவதில் தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இக்குவாரிக்கு நிபந்தனையற்ற அனுமதி வழங்க பரிந்துரைக்கிறேன்". நன்றி, என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**7. திரு. E. மூர்த்தி, சித்தாலப்பாக்கம் கிராமம்.**

இவர் கூறுகையில், " திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம் சித்தாலப்பாக்கம் கிராமத்திற்கு கல்குவாரி அமைப்பதற்காக கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் அனைத்து துறை அரசு அதிகாரிகளுக்கும் என் மாலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஏழாச்சேரியிலிருந்து வந்திருக்கிறேன். சித்தாலப்பாக்கம் ஏழாச்சேரியும் பக்கத்து பக்கத்து ஊரு தான். நான் இதற்கு முன் ஏழாச்சேரியில் ஐந்து ஆண்டுகள் வார்டு உறுப்பினராக இருந்திருக்கிறேன். அதனால், கல்குவாரிக்கு எவ்வளவு நிதி வருகிறது என்பது எனக்கு தெரியும். அதனால் கிராமத்திற்கு நிறைய விஷயங்கள் செய்திருக்கிறோம். ஏனென்றால், கல்குவாரி இல்லை என்றால் அந்த ஏழாச்சேரி கிராமம் அந்த அளவு வளர்ச்சி அடைந்து இருக்குமா என்று தெரியாது. ஒவ்வொரு நிதியும் கல்குவாரி மூலம்தான் வருகிறது. அரசு கொடுக்கின்ற நிதி கிராமங்களுக்கு போதுமானதாக இல்லை. கல்குவாரிகள் எப்பொழுது வந்ததோ, அந்த கல்குவாரிகள் மூலம் வருகின்ற வருமானம் தான் இந்த கிராமத்திற்கு முழுமையாக என்னென்ன திட்டங்கள் எல்லாம் எங்களால் செய்ய முடியுமோ, அதிகபட்சம் என்ன செய்ய முடியுமோ, அதை ஏழாச்சேரி கிராமத்திற்கு செய்திருக்கிறோம். நீங்கள் யார் வேண்டுமென்றாலும் எந்த அதிகாரியானாலும் வந்து ஏழாச்சேரி கிராமத்தை பாருங்கள். எவ்வளவு

அருமையாக செய்திருக்கிறோம் என்று தெரியும். இதே மாதிரி தான் சித்தாலப்பாக்கத்திற்கும் கல்குவாரி வந்தது என்றால் அந்த ஊர் கண்டிப்பாக மேம்படும். கண்டிப்பாக அந்த ஊர் வளர்ச்சி அடையும். சில தவறுகள் கல்குவாரியினால் இருக்கிறது, அதையெல்லாம் சரி செய்து அரசு அதிகாரிகள் முறையாக கவனித்து அதை பராமரிக்க வேண்டும். ஏனென்றால் மக்கள்தான் பிரதானமானவர்கள் மக்களை மோசமான நிலைக்கு ஆளாக்கிவிட்டு எந்த தொழில் செய்தாலும் நன்றாக இருக்காது. மக்களுக்கு தேவையான உதவிகள் என்னவோ கிராமத்திற்கு தேவையான உதவிகள் என்னவோ அது எல்லாம் செய்து கொடுங்கள். "சித்தாலப்பாக்கத்திற்கு இந்த குவாரி அமைந்தால் கண்டிப்பாக அது உதவியாக இருக்கும். அதனால் பொதுமக்கள் அனைவரும் இந்த கல்குவாரி அமைவதற்கு ஆதரவு தெரிவிக்கிறோம். நன்றி. வணக்கம்" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>8. திரு. கோபிநாத், சித்தாலப்பாக்கம் கிராமம்.</u>**

இவர் கூறுகையில், "இந்த குவாரி வருவதினால் பல குடும்பங்கள் பிழைக்கிறார்கள். நான் சிப்காட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் வீட்டிலேயே இருந்தேன். பின்னர் இந்த குவாரி மூலமாக வேலை வாய்ப்பு ஏற்பட்டு நான் நல்லபடியாக இருக்கிறேன். என் பிள்ளைகளும் நன்றாக படிக்கிறார்கள். அதுபோல இந்த குவாரி வருவதினால் கிராமத்தில் இருக்கும் பள்ளிகளுக்கு நிதிகள் தருகிறார்கள். பிள்ளைகள் நன்றாக படிக்கின்றார்கள். ஊருக்கு ஒளி வசதி, சாலை வசதி, நன்றாக செய்து தருகிறார்கள் இந்த குவாரி வருவது ஊருக்கு நல்லது தான். இந்த குவாரி வருவதை நான் வரவேற்கின்றேன்" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்

**<u>9. திரு. தனசேகர், சித்தாலப்பாக்கம் கிராமம்.</u>**

இவர் கூறுகையில், முன்மொழியப்பட்ட சுரங்கத் திட்டத்திற்கு அருகில் எங்களுக்கு சுமார் 5 ஹெக்டேர் விவசாய நிலம் அமைந்துள்ளது என்பதை

நாங்கள் தெரிவிக்க விரும்புகிறோம். எங்கள் விவசாய நிலத்தில் கடந்த ஐந்து தலைமுறைகளாக நெல் ராகி, உளுந்து மற்றும் காய்கறிகள் போன்ற உணவு தானியங்களை பயிரிட்டு வருகிறோம்.

இந்த சாகுபடி வருமானம் எங்கள் குடும்ப உறுப்பினர்களின் ஒரே வருமான ஆதாரமாகவும், எங்கள் உயிரோட்டமான வாழ்வாதாரமாகவும் கருதப்படுகிறது. மேலும், இந்த நிலம் எங்கள் அன்றாட செலவுகள், மருத்துவச் செலவுகள் கல்வி போன்ற எங்கள் குடும்பச் செலவுகளுக்கு எங்கள் முதுகெலும்பாகவும் உள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, பொதுமக்களின் ஒப்புதல் மற்றும் அறிவிப்பு இல்லாமல், இதே வகை சுரங்கத் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. கரடுமுரடான கல் மற்றும் சரளை குவாரி சுரங்கத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின் காரணமாக, எங்கள் விவசாய நிலத்தில் சாகுபடி செய்ய முடியவில்லை. இந்தத் திட்டத்திற்கு முன்பு கிணற்றில் நீர் மட்டம் தரை மட்டத்திலிருந்து 10 அடி உயரத்தில் இருந்தது, ஆனால் இப்போது கிணறு முற்றிலும் வறண்டு விட்டது.

இந்த புதிய சுரங்கத் திட்டத்தைப் பற்றி குறிப்பிடுகையில், பின்வரும் காரணத்திற்காக இந்தத் திட்டத்தை அங்கீகரிக்க கடுமையாக எதிர்க்கிறேன்.

1) குவாரி நடவடிக்கைகளின் போது தூசி உற்பத்தியாவது முதன்மையான கவலையாகும், இது பயிர்களில் படிந்து, அவற்றின் ஒளிச்சேர்க்கை திறனைக் குறைத்து, தீங்கு விளைவிக்கும் துகள்களால் மண்ணை மாசுபடுத்துகிறது.

2) சுரங்க நடவடிக்கைகள் சிலிக்கா தூசி மற்றும் டீசல் வெளியேற்றம் போன்ற காற்று மாசு காரணிகளின் வெளிப்பாட்டை அதிகரிக்கின்றன, மேலும் நீண்டகால சுவாச மற்றும் தோல் தொடர்பான நோய்களுக்கு வழி வகுக்கின்றன.

3) வெடி வெடித்தல் போன்ற நடவடிக்கைகளால் அருகிலுள்ள வயல்களில் மண்ணின் அமைப்பை சீர்குலைத்து, நீர் ஊடுருவல் மற்றும் வடிகால் ஆகியவற்றைப் பாதித்து, கருவுறுதல் மற்றும் பயிர் விளைச்சலைக் குறைக்கின்றன.

4) வெடி வெடித்தல் மற்றும் துளையிடுதல் ஆகியவை அதிர்வுகளை ஏற்படுத்தி அருகிலுள்ள வீடுகள், கிணறுகள் மற்றும் பொது உள்கட்டமைப்பில் விரிசல்கள் மற்றும் கட்டமைப்பு சேதத்தை ஏற்படுத்தும்.

5) குவாரியில் முறையற்ற திடக்கழிவு மேலாண்மை நடைமுறைகளால் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படும் நிலத்தடி நீர் ஆதாரங்களை மாசுபடுத்தக்கூடும்.

6) பாறைகளை உடைக்க பாறை வெடிப்புப் பொடியைப் பயன்படுத்தும்போது, எங்கள் சாகுபடி நிலத்தில் கல் விழும்போது, விழுந்த கற்களை அகற்ற எங்கள் சொந்த மனித சக்தியைப் பயன்படுத்தி சாகுபடியைப் பயன்படுத்துகிறோம்.

7) நாங்கள் எங்கள் ஆட்சேபனையை முன்மொழியப்பட்ட குவாரி உரிமையாளர் திரு. தர்மலிங்கத்திடம் பலமுறை நேரில் எங்கள் விவசாய இழப்பை எடுத்துரைத்து விளக்குகியுள்ளோம். மேலும், முன்மொழியப்பட்ட சுரங்கத் திட்டத்தின் ஆரம்ப ஆய்வின் போது பிப்ரவரி மாதம் 2025 –ல் தொலைபேசி மூலம் சார்–ஆட்சியர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி ஆகியோரிடம் எங்கள் ஆட்சேபனையை நாங்கள் தெரிவித்தோம்.

8) எங்கள் வாய்மொழி கோரிக்கை மற்றும் முறையீடு இருந்தபோதிலும், குவாரி உரிமையாளர் மிகவும் அரசியல் செல்வாக்கு மிக்க நபர் என்பதால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

9) சுரங்க உரிமையாளர் அனைத்து மட்ட செல்வாக்கும் கொண்டிருப்பதால், அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க நாங்கள் அஞ்சுகிறோம்.

10) முன்மொழியப்பட்ட திட்டம் மன அழுத்தத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், உடல் ரீதியான சேதத்தையும் ஏற்படுத்துகிறது. எங்கள் நிலம் திட்ட இடத்திற்கு அருகில் அமைந்திருப்பதால் நாங்கள் குறிப்பாக பாதிக்கப்பட்டுள்ளோம்.

11) எனவே, நாங்கள் விவசாயியாக இருப்பதனாலும், எங்கள் நிலங்கள் குவாரி அருகில் இருப்பதாலும் இந்த சர்வே எண்27/1,2,3,4,5,6,7,10 28/11 –ல் உத்தேசிக்கப்பட்டுள்ள சுரங்கத் திட்டத்தை எதிர்க்கிறோம்.

சார்–ஆட்சியர், மாசு கட்டுப்பாடு அதிகாரி மற்றும் கிராம நிர்வாக அலுவலர் எங்கள் மேல்முறையீட்டைக் கேட்டு, எங்கள் விவசாய நிலங்களையும் உயிரையும் பாதுகாப்பதில் உரிய நடவடிக்கை எடுப்பார் என்று நாங்கள் நம்புகிறோம்.

மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டதற்கான அல்லது ஆட்சேபனை தெரிவித்ததற்கான ஒப்புகை வழங்கப்படலாம். நன்றி.

**<u>10. திரு. முத்துராஜா, ராமநாதபுரம் மாவட்டம், கமுதி கிராமம், சமூக ஆர்வலர்.</u>**

இவர் கூறுகையில், "இம்மன்றத்தை அலங்கரித்து வழிநடத்தி செல்கின்ற மாவட்ட நிர்வாகத்திற்கும் சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் இந்நிறுவனத்தை செவ்வண நடத்திக் கொண்டிருக்கும் நிறுவன உரிமையாளர்களுக்கும் கிராம பொதுமக்களுக்கும் மற்ற அரசு ஊழியர்களுக்கும் சமூக ஆர்வலர்களுக்கும் என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றான் மகாகவி பாரதி. ஏன் எனில் ஒரு நாட்டின் வளர்ச்சியில் இங்கு இருக்கும் அவனிவளம் முக்கிய பங்கு வகிக்கின்றது. அதிலும் வளர்ந்து வரும் நாடுகளில் குறிப்பாக நம் நாடும் இருக்கின்றது. இதில் தொழில் துறையால் சில மாற்றங்கள் காண வேண்டி உள்ளது. எனவே இந்நிறுவனம் தொழில் செய்ய நாமும் துணை நிற்க வேண்டும். மேலும் இந்நிறுவன உரிமையாளர்களுக்கு சில ஆலோசனை வழங்க கருதுகிறேன். அதனை சிந்தனையில் வைத்து செயல்பட வேண்டும். மேலும் இந்நிறுவனம் சிறப்பாக செயல்படுவதில் ஐயம் ஒன்றும் இல்லை. இந்த கிராமத்தில் உள்ள சான்றோர்கள் ஒருங்கிணைந்து கமிட்டி ஒன்று அமைத்து செயல்பட வேண்டும். அதன் மூலம் இவ்வளர்ச்சி பணிகளை மேற்கொண்டு வந்தால் எந்த ஒரு கருத்து வேறுபாடும் வராது. இந்த நிறுவனத்தில் பணியாளர்கள் பணி தேர்வு செய்யும்போது மொத்தமாக அருகில் உள்ள கிராமங்களில் இருந்தோ அல்லது குவாரி அமைவிடத்தின் அருகாமையில் உள்ள கிராமங்களில் இருந்தோ தேர்வு செய்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். அதுபோல இந்த நிறுவனத்தை சுற்றிலும் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் அரசு, புங்கை, வேங்கை, வேம்பு பனை போன்ற அதிகப்படியான மரங்களை நட்டு சுற்றுச்சூழலை பாதுகாக்குமாறு

கேட்டுக்கொள்கிறேன் என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**11. திரு. G. நாகராஜன், சின்ன ஏழாச்சேரி கிராமம்.**

இவர் கூறுகையில், " இந்த குவாரி வந்தால் நிறைய வேலை வாய்ப்புகள் கிடைக்கும் இந்த குவாரி வருவதை வரவேற்கின்றேன்" என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**12. திரு. வேலு, சின்ன ஏழாச்சேரி கிராமம்.**

இவர் கூறுகையில் “இந்த குவாரி வருவதை முழுமையாக வரவேற்கின்றேன். இந்த குவாரி வருவதால் அந்த ஊரின் வளர்ச்சி முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். இதனால் அங்கு இருக்கும் மக்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு கிடைக்கும். வணக்கம் கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**13. திரு. மனோகரன், சின்ன ஏழாச்சேரி கிராமம்.**

இவர் கூறுகையில் “எங்கள் கிராமத்து பக்கத்தில்தான் சித்தாலப்பாக்கம் கிராமம் உள்ளது. எங்கள் கிராமத்திற்கு கல்குவாரி கிடைத்ததால் எங்கள் ஊருக்கு நன்மை கிடைத்திருக்கிறது. சாலை வசதி மின்சார வசதி இவை எல்லாம் கிடைத்தது. 20 வருஷமா ஊரில் தண்ணீருக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் இப்போது குவாரி வந்த பிறகு குடிப்பதற்கு தண்ணீர் அளவுக்கு அதிகமாக, எங்களுக்கு போதுமான அளவு தண்ணீர் இருக்கிறது. இதற்கு காரணம் எங்கள் ஊரில் குவாரி இருப்பதால்தான். குவாரியின் வருமானத்தை வைத்து தான் எங்கள் ஊரில் மின்சார வசதி குடிநீர் வசதி சாலை வசதி எல்லாம் கிடைத்தது. அது மட்டும் அல்ல கிராமத்தில் உள்ள பள்ளிக்கூடங்கள் எல்லாம் ஒரு தரமான பள்ளிக்கூடங்களாக இருக்கிறது என்றால், இந்த குவாரி நடத்துவதால் தான். இந்த குவாரியால் எங்கள் கிராமத்திற்கு நன்மைதான் தீமை ஒன்றும் இல்லை". நன்றி வணக்கம் கூறி இந்த

குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**14. திரு. யுவராஜ், சித்தாலப்பாக்கம் கிராமம்.**

இவர் கூறுகையில், "இந்தக் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்திருக்கும் அரசு அதிகாரிகளுக்கு என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் குறிப்பிட்டுள்ள குவாரியானது எங்கள் இடத்தில் அருகாமையில் உள்ள கிட்டத்தட்ட பத்து ஏக்கர் நிலத்தின் அருகாமையில் உள்ளது. எனக்குத் தெரிந்து இந்த ஐந்து தலைமுறையாக விவசாய மட்டுமே மேற்கொண்டு வந்துள்ளோம். எங்கள் வாழ்வாதாரத்தின் முக்கியமான அங்கமாக வகிக்கிறது. இந்த குவாரிக்கு அனுமதி வழங்கினால் நிலத்தடி நீர் மற்றும் விவசாயம் முற்றிலும் பாதிக்கிறது. இதனால் மண்ணின் தன்மையும் விவசாயம் மற்றும் பயிர்களின் வளர்ச்சியும் முற்றிலும் பாதிக்கப்படுகிறது. ஏனென்றால் இது ஒரு விவசாய பூமி என்பதால் நாம் விவசாயத்தை நம்பி இருக்கின்றோம். ஆனால் அதற்கு பக்கத்திலே குவாரி வருகிறது. நாட்டின் வளர்ச்சிக்காக எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் விவசாயத்தை அழித்து தான் செய்ய வேண்டும் என்பது விதிவிலக்காக இல்லை. இப்போது குறிப்பிட்டுள்ள தர்மலிங்கம் குவாரி அருகாமையில் உள்ள ஒரே குடும்பமானது எங்களுடைய குடும்பம். அதன் பக்கத்தில் நிறைய குடும்பங்களும் இருக்கிறது. ஆனால் அவர்கள் வரவில்லை. ஆனால் என்னோட கருத்தை பதிவு செய்ய வேண்டும். மேலும் மேலும் அதிகப்படியான பாதிப்பு என்றால் பக்கத்தில் உள்ள எங்களுடைய நிலத்திற்கு தான். இப்படி அனுமதி அளித்துக் கொண்டே போனால் வருங்காலத்தில், அடுத்து 100 வருடத்திற்கு அங்கு தண்ணீர் தர முடியும் என்று யாராவது விளக்க உரை இருந்தால் கொஞ்சம் சொல்லுங்கள். ஏனென்றால் நிலத்தடி நீர் எல்லாம் அதற்கு சென்று விடும். அதற்கு பக்கத்தில் உள்ள கிணற்று நீர் காப்பாற்றுவார்களா என்று இங்கு யாரும் வாக்கு கொடுக்க முடியாது. இந்த கிணற்றை நம்பி தான் பயிர் நிலங்கள் இருக்கிறது. பயிரை நம்பி தான் எல்லோரும் இருக்கிறோம். எனக்குத் தெரிந்து என்னுடைய 28 வயது வரை அதற்கு முன்பு

100 வருடங்களாக விவசாயம் மட்டும்தான் தொழிலாக செய்து வந்தோம். ஆகையால் **இந்த குவாரிக்கு ஆட்சேபனை தெரிவிக்க நான் இங்கு வந்துள்ளேன்**.

**கீழ்கண்ட 35 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். இதில் 34 நபர்களும் குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர்.**

| **வ. எண்** | **பெயர் மற்றும் ஊர்** | **கருத்து** |
|---|---|---|
| 1. | திரு. K.S. சீனுவாச மூர்த்தி,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 2. | திரு. மோகன்,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 3. | திருமதி. ரேவலி சாவித்திரி,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 4. | திரு. கயாபட்டி நரேஷ்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 5. | திரு. U. இராமசந்திரா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6. | திரு. S. அங்கய்யா,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 7. | திருமதி. குண்டால சாய்தாமா,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 8. | திரு. ஹஜரத்தையா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 9. | திரு. சுப்பராமையா,<br>திருப்பதி. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 10. | திரு. M. சிவநாதன்,<br>விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 11. | திரு. B. பாலகிருஷ்ணா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 12. | திருமதி. அவுட்டா மங்கம்மா,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 13. | திரு. புருஷோத்தமன்,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 14. | திரு. U. சங்கரய்யா,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 15. | திருமதி. K. சாரதா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 16. | திரு. J. ராஜா,<br>தர்மபுரி. | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 17. | திரு. தேவலிங்கம்,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 18. | திரு.K. சரவணா,<br>காஞ்சிபுரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 19. | திரு. துரைசாமி,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 20. | திரு. வெங்கடேஷன்,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 21. | திரு. M. முத்துராஜா,<br>இராமநாதபுரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 22. | திருமதி. அக்காலயா டொட்டி,<br>தெலுங்கானா. | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 23. | திரு. வெங்கடேஷ் பாயா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 24. | திரு. A. சுப்ரமணியம்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 25. | திருமதி. S. பாத்திமா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 26. | திரு. V. மணிகண்டன்,<br>விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |
| 27. | திரு. V. சுரேஷ்,<br>விழுப்புரம். | இத்திட்டத்திற்கு ஆதரவு<br>தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 28. | திரு. A. வெங்கட சுப்பய்யா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 29. | திரு. S. வெங்கட சுப்பய்யா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 30. | திரு. இராஜேந்திரன்,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 31. | திரு. நோக்கியாமணி,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 32. | திரு. தமிழ்மணி,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 33. | திரு. இன்பசேகரன்,<br>இராணிப்பேட்டை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 34. | திரு. தனசேகரன்,<br>வெம்பாக்கம்,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார் |
| 35. | திரு. பாலே நவீன் குமார், தெலுங்கானா | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், வருவாய் கோட்ட அலுவலர், செய்யாறு அவர்களின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 02.07.2025).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (13 பக்கங்கள்/59 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).

5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் வாயிலாக பெறப்பட்ட 35 மனுக்கள்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

**வருவாய் கோட்ட அலுவலர்(முகூபொ),**
**செய்யாறு.**

(2/6)